## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

முன்னிலை : திருமதி.V.திலகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் நாள் திங்கள்கிழமை

**அசல் வழக்கு எண் 24/2014**

1. தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி டவுன், மதுரை ரோட்டில் சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஷெட் நம்பர் 1ல் இயங்கிவரும் ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸின் பார்ட்னர் கிருஷ்ணசாமி நாயக்கர் மகன், இந்து, சுமார் 68 வயதுள்ள என்.கே.ராஜகோபாலன்

2. தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி டவுன், மதுரை ரோட்டில் சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஷெட் நம்பர் 1ல் இயங்கிவரும் ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸின் பார்ட்னர் என்.கே.ராஜகோபாலன் மகன், இந்து, சுமார் 35 வயதுள்ள கே.ஆர்.ராஜ்குமார்

3. தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி டவுன், மதுரை ரோட்டில் சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஷெட் நம்பர் 1ல் இயங்கிவரும் ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸின் பார்ட்னர் என்.கே.ராஜகோபாலன் மகன், இந்து, சுமார் 33 வயதுள்ள கே.ஆர்.சரவணகுமார்

.... வாதிகள்

- எதிர் -

1. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு, கிருஷ்ணா காலனியில் கதவு எண் 43ல் வசிக்கும் சீனிவாசன் மனைவி இந்து, சுமார் 60 வயதுள்ள எஸ்.திலகா

2. தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி டவுன், என்.ஆர்.டி.நகர், காந்திஜி ரோடு, கதவு எண் 29/11ல் வசிக்கும் வெங்கிடசாமி மகன் இந்து சுமார் 67 வயதுள்ள 1ம் பிரதிவாதியின் பவர்ஏஜெண்டான வி.சீனிவாசக

3. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு, கிருஷ்ணா காலனியில் கதவு எண் 43ல் வசிக்கும் கிருஷ்ணசாமி நாயக்கர் மகன் இந்து, சுமார் 60 வயதுள்ள என்.கே.சீனிவாசன்

... பிரதிவாதிகள்

தேனி மதுரை ரோட்டில் அமைந்துள்ள சிட்கோ பதிவு எண் 76/90ல் உள்ள ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தில் வாதிகள் பங்குதாரர்கள் என விளம்புகை பரிகாரம்

வழங்கக் கோரியும், தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், அதன் தொடர்ச்சியாக 1 முதல் பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள வாதிகளின் அமைதியான சுவாதீனத்திற்கு எந்தவித இடையூறும் செய்யக் கூடாதென்று உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எவ்வித பந்தக பராதீனங்கள் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு மூலம் எழுந்த நாள் 3.6.87, 31.3.01, 1.4.01, 4.4.14 மற்றும் ஆகிய தேதிகளில் தேனியில் உற்பத்தி.

வழக்கு தாக்கலான நாள்: 21.4.14 மற்றும் 23.4.14

<u>செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைக்கட்டணம்</u>

**<u>(அ) பரிகாரம்</u>**

| | | |
|---|---|---|
| விளம்புகை பரிகாரத்திற்கு<br>வாதிகளின் மதிப்பு ரூ.1,000/-க்கு<br>தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச்<br>சட்டப் பிரிவு 25(d)ன்படி செலுத்தப்பட்ட<br>கட்டணம் | | ரூ. 75-50 |

**<u>ஆ) பரிகாரம்</u>**

| | | |
|---|---|---|
| தாவா சொத்தில் விளம்புகை மற்றும்<br>உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கு | | |
| வாதிகளின் மதிப்பு | ரூ.40,00,000/- | |
| வாதிகளின் பாதி மதிப்பு | ரூ.20,00,000/-க்கு | |
| தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்<br>கட்டணச் சட்டப் பிரிவு 25(b)ன்படி<br>செலுத்தப்பட்ட கட்டணம் | | ரூ.1,50,000-50 |
| நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கு<br>வாதிகளின் மதிப்பு ரூ.1,000/-க்கு<br>தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச்<br>சட்டப் பிரிவு 27(c)ன்படி செலுத்தப்பட்ட<br>கட்டணம் | | ரூ. 75-50 |
| | ஆக மொத்தம் | ரூ.1,50,151-50 |

ஆக மொத்தம் ரூ.1,50,152/- நீதிமன்ற முத்திரை கட்டணமாக செலுத்தப்பட்டது.

இந்த வழக்கானது என் முன்பாக 26.11.2018ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.வஜ்ரவேல் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும் வாதிகள் அழைத்தும் ஆஜரின்றி, வாதிகளின் வருகையின்மை காரணமாக இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

<u>தீர்ப்பாணை</u>

1. இவ்வழக்கு வாதிகளின் வருகையின்மை காரணமாக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவு தொகை இல்லை.

<u>சொத்து விபரம்</u>

1. தேனி மாவட்டம், தேனி வட்டம், தேனி டவுன், மதுரை ரோடு, செட் நம்பர் 1 சிட்கோவில் இருக்கும் ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸ், பார்ட்னர்சிப் பார்ம், பதிவு எண் 76/1990 என கொண்டது.

2. தேனி மாவட்டம், பெரியகுளம் ரிடி. தேனி சப்டி. தேனி-அல்லிநகரம் நகராட்சி, தேனியில் இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்டில் சர்வே எண் 211/1 மற்றும் 212-ல் மேல்பக்கத்திலும், வால் கரடு சர்வே எண் 23ல் கீழ்பக்கமும் உள்ள ஏக்கர் 1 செண்டு 12 உள்ள இடத்தில் கட்டியுள்ள செட் நம்பர் 1க்கு நான்குமால்:-

கிழக்கு – எல்.எஸ்.மில் காம்பவுண்டு
மேற்கு - செட் நம்பர் 2 மற்றும் 3
தெற்கு - தேனி டு மதுரை ரோடு
வடக்கு - 40அடி அகலமுள்ள கிழமேல் ரோடு.

இம்மாலில் உள்ள மனையிடமும், ஷை இடத்தில் தென்கிழக்கு பக்கம் வடக்கு பார்த்து கிழமேலடி 100 தென்வடலடி 40க்கு 4000 சதுரடியில் கட்டியுள்ள ஏ.சி.சி.ஷீட் போட்ட கட்டிடமும், அதன் நிலை, ஜன்னல், ஷட்டர் வகையராவும், இதை ஒட்டி தென்பக்கம் மேற்குப் பார்த்து 380 சதுரடியில் கட்டியுள்ள ஆர்.சி.சி. கட்டிடமும், கதவு, நிலை, ஜன்னல் வகையராவும், வடபக்கம், மேற்குபக்கம் உள்ள காலியிடமும், ஷை கட்டிடத்தில் இணைக்கப்பட்டுள்ள எஸ்.சி.1.132பி132 எண்ணில் உள்ள மின்இணைப்பு வகையராவும், கட்டிடத்தில் உள்ள மிஷினரி வகையராவும் உள்பட.

<u>செலவுத் தொகை பட்டியல்</u>

தாக்கல் இல்லை

2018ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்) வி.திலகம்
26.11.18
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தேனி (இருப்பு) பெரியகுளம்.